செ.வெ.எண்.576 நாள்.22.07.2025

# செய்தி வெளியீடு

திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகில், வருவாய் வட்டம் வாரியாக காலியாக உள்ள மொத்தம் 151 கிராம உதவியாளர் பணியிடங்கள் வேலை வாய்ப்பு அலுவலகம் மற்றும் நேரடியாக பணிநியமனம் செய்யப்படவுள்ளன. வட்டம் வாரியாக நியமனம் செய்யப்படவுள்ள கிராம உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை (ம) இன சுழற்சி விவரம் அந்தந்த வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள தகவல் பலகையில் ஒட்டப்படும். மேற்படி பணிக்கான விண்ணப்பத்தினை https://tiruvallur.nic.in/ என்ற இணையதள முகவரியிலிருந்து 23.07.2025 முதல் பதிவிறக்கம் செய்துக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும், 22.08.2025 மாலை 05.45 மணிக்குள் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும்.

<table>
<tr><td>கல்வித்தகுதி</td><td>தமிழ்நாடுஅரசுத்தேர்வுகள்இடைநிலைப்பள்ளிஇறுதிவகுப்புசான்றிதழ் தேர்வில்(SSLC Secondary School Leaving Certificate Examinations) தமிழ்ஒருபாடமாகக்கொண்டுதேர்வுஎழுதப்பட்டிருக்கவேண்டும்.<br>(குறிப்பு SSLC Secondary School Leaving Certificate Examination)மதிப்பெண்பட்டியல்கட்டாயம்சமர்ப்பிக்கவேண்டும்.)</td></tr>
<tr><td>பிறதகுதிகள்</td><td>1. விண்ணப்பதாரர், விண்ணப்பிக்கும் வட்டத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>2. தமிழில் பிழையின்றி வாசித்தல் மற்றும் எழுதும் திறன் பெற்றிருக்க வேண்டும்.<br>3. விண்ணப்பதாரர்கள், விண்ணப்பிக்கும் வட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவராகவும் இருக்க வேண்டும். காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அக்கிராம பணியிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>4. உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும்.<br>5. மிதிவண்டி / இருசக்கர மோட்டார் வாகனம் ஓட்டும் திறன் பெற்றிருக்க வேண்டும்.<br>6. விண்ணப்பதாரர் மீது எவ்வித வழக்கு நிலுவையில் இருக்க கூடாது. பணிநியமனத்திற்கு விண்ணப்பதாரருடைய ஒழுக்கமும் முன்வரலாறும் தகுதிப்படுத்தும் வகையில் அமைய வேண்டும்.</td></tr>
<tr><td>வயதுவரம்பு(01–07–2025 படி)</td><td><table>
<tr><td>குறைந்தபட்ச வயது</td><td>21 (அனைத்துபிரிவினருக்கும்)</td></tr>
<tr><td rowspan="2">அதிகபட்சவயது</td><td>32 வயது(பொதுபிரிவினருக்கு)</td></tr>
<tr><td>37 வயது(இதரபிரவினருக்கு)</td></tr>
</table></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **மாற்றுத்திறனாளிகளுக்கான அதிகபட்ச வயது வரம்பு** | 10 ஆண்டுகள் கூடுதலாக தளர்வு வழங்கப்படும். இருப்பினும், அவர் தேர்வு செய்யப்பட்டுள்ள பதவியினை திறமையுடன் செய்து முடிப்பதற்கு அடிப்படை தகுதி பெற்றிருந்தால் அவர் தகுதியுடையவராவார். |
| | **முன்னாள் இராணுவத்தினருக்கு அதிகபட்ச வயது வரம்பு** | 50 வயது (பொதுபிரிவினருக்கு)<br>55 வயது( இதரபிரிவினருக்கு) |
| **விண்ணிப்பிக்கும் முறை** | ➢ மேற்படி பணிக்கான விண்ணப்ப படிவத்தை https://tiruvallur.nic.in/ என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டியது.<br>➢ விண்ணப்பதாரர்கள் மேற்படி பணிக்கான விண்ணப்ப படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவண இணைப்புகளுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம். | |
| **ஊதியவிவரம்** | Special Time Scales of pay Matrix (சிறப்பு கால முறை ஊதியம்)<br>Level 6 ( Rs.11,100 – Rs.35,100) | |

## நிபந்தனைகள்

- ❖ விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாளுக்கு பின்னர் எவ்வகையிலும் வரப்பெறும் விண்ணப்பங்கள் முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்படாது.
- ❖ அரசாணை (நிலை) எண்.16 மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள்.15.04.2025–இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் தமிழ் வழி கல்வி சான்று சமர்ப்பிக்க வேண்டும். **(படிவம் இணைக்கப்படுகிறது.)**
- ❖ கிராம உதவியாளர் பணியிடத்திற்கான தேர்வில் இன சுழற்சி விதிகள் பின்பற்றப்படும்.
- ❖ If a qualified and suitable woman candidate belonging to Scheduled Castes, Scheduled Tribes, Backward Class Muslims, Backward Classes, Most Backward Classes or Denotified Communities or General Turn is not available for selection for appointment in the turn allotted for women in the cycle, then, the turn so allotted shall go to a male candidate within the respective category. In respect of the posts to which the rule of reservation of appointments does not apply, then, the turn so allotted shall go to the next male candidate. [ தமிழ்நாடுஅரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 26 (5)– இன்படி].

- ❖ விண்ணப்பதாரர் அளித்த ஆவணங்கள் / விவரங்கள் பின்னாளில் ஏதேனும் போலியானவை என தெரியவரும்பட்சத்தில், அவர் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- ❖ தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் மிதிவண்டி / இருசக்கர வாகனம் ஓட்டும்திறன், வாசித்தல் / எழுதுதல், திறனறித் தேர்வு, மற்றும் நேர்முக தேர்வு ஆகியவற்றிற்கு தனித்தனியே கடிதம் அனுப்பிவைக்கப்படும்.
- ❖ திறனறித் தேர்வு மற்றும் நேர்காணலுக்கு வருகை தர போக்குவரத்து செலவினம் ஏதும் வழங்கப்பட மாட்டாது.
- ❖ விண்ணப்பங்களை தபால் / அஞ்சல் மூலம் சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பும் போது ஏற்படும் கால தாமதங்களுக்கு துறை பொறுப்பாகாது.
- ❖ பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சம்மந்தப்பட்ட வட்டாட்சியருக்கு மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.
- ❖ இதர முகவரிகளுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- ❖ 25×10 அளவுள்ள அஞ்சல் உறையில் ரூ.25/-க்கான அஞ்சல் வில்லையை ஒட்டி தற்போதைய சுயவிலாசத்தை குறிப்பிட்டு, அதனை விண்ணப்பத்துடன் சேர்த்து வழங்க வேண்டும்.
- ❖ மூன்றாம் பாலினத்தவர் எனில், தமிழ்நாடு மூன்றாம் பாலினத்தவர் நலவாரியத்தால் வழங்கப்பட்ட சான்று இணைக்கப்பட வேண்டும்.
- ❖ விண்ணப்பத்துடன் இணைக்கப்படும் அனைத்து சான்றுகளிலும் சுயசான்றொப்பம் (Self Attested) செய்திருக்க வேண்டும்.

**வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்**